# கணக்கீடு – 33 தரம் - 13

## Covid – 19 இடர் விடுமுறைகால பயிற்சி

## தேர்ச்சி 14 – கூலிக் கிரயம்

Week : Sep 6 – 10
இரத்தினபுரி தமிழ் தேசிய கல்லூரி

தயாரிப்பு : சஜித்.sp
BBA(Financial Spl), University of Colombo

★ **கூலிக்கிரயம்**

பொருள் அல்லது சேவையை உற்பத்தி செய்யும் செயற்பாட்டில் ஈடுபட்டிருக்கும் ஊழியர்கள் தம்மால் அர்ப்பணிக்கப்படும் உழைப்பின் சார்பாக நேரடியாக அல்லது மறைமுகமாக மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகள் கூலிக்கிரயம் எனப்படும்.

★ **கூலிக்கிரயத்தில் உள்ளடங்குபவை**

- ஊழியர்களின் அடிப்படைச் சம்பளம் / கூலி
- மேலதிக நேரவேலைக் கொடுப்பனவு
- ஏனைய மேலதிகக் கொடுப்பனவுகள்
- வைத்திய அல்லது ஏனைய விசேட கொடுப்பனவு
- ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்பு
- ஊழியர் நம்பிக்கை நிதியப் பங்களிப்பு

★ **சம்பளக் அல்லது கூலிக் கொடுப்பனவிற்காக இரு பிரதான அடிப்படைகள்**

1) வேலை நேரத்தை அடிப்படையாகக் கொண்டது.
2) வெளியீட்டு அலகுகளை அடிப்படையாகக் கொண்டது

**1) நேரக்கூலி**

ஊழியர் சேவையில் ஈடுபட்டிருக்கும் வேலை நேரத்தின் அடிப்படையில் வழங்கப்படும் சம்பளக் கொடுப்பனவு நேர அடிப்படைச் சம்பளம் / நேரக்கூலி எனப்படும்.

**2) துண்டுக் கூலி / உற்பத்தி அடிப்படைக் கூலி**

ஊழியரினால் உற்பத்தி செய்த வெளியீட்டு அலகுகளின் அடிப்படையில் சம்பளக் கொடுப்பனவு செய்தல் துண்டுக் கூலி / உற்பத்தி அடிப்படைக் கூலி எனப்படும்.

Sajith.SP